# ஃபிளிப்கார்டின் ஷாப்ஸி சிறிய நகரங்களில் சமூக வர்த்தகத்தை மேலும் துரிதப்படுத்த பல முயற்சிகளை அறிவித்துள்ளது

- *விற்பனையாளர்களுக்கான பூஜ்யம் கமிஷன் சந்தையை அறிவிக்கிறது*
- *ஜூலை 2021 இல் தொடங்கப்பட்டதிலிருந்து ஷாப்ஸி விரைவான வளர்ச்சியைக் கண்டுள்ளது, தளத்தில் 2 லட்சத்திற்கும் அதிகமான பயனர்கள் செயலில் உள்ளனர்*
- *பண்டிகை காலத்தை முன்னிட்டு ஷாப்ஸி 20X வளர்ச்சியைப் பதிவுசெய்வதை இலக்காகக் கொண்டுள்ளது*

**பெங்களூரு - ஆகஸ்ட் 3, 2021:** பிளிப்கார்ட்டின் சமீபத்திய வழங்குதலான ஷாப்ஸி, ஜீரோ -கமிஷன் சந்தையை தொடங்குவதாக இன்று அறிவித்தது. இந்த முயற்சியின் மூலம் ஃபிளிப்கார்ட், ஃபேஷன், மளிகை மற்றும் வீட்டுப் பிரிவுகளில் சிறிய விற்பனையாளர்களை ஆன்லைனில் ஒழுங்கமைக்கவும் மற்றும் அவர்களை இன்னும் அதிகமாக ஆன்லைனுக்கு கொண்டு வரவும் உதவும். இது தளத்தில் பொருட்கள் மற்றும் பட்டியல்களின் விநியோகத்தை மேலும் சீராக்கிப் பெருக்கும், அத்துடன் டிஜிட்டல் சில்லறை விற்பனை கால்பதிக்காத 2 ஆம் நிலை நகரங்கள் மற்றும் டவுன்களில் மின்-வர்த்தகத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

இன்று பிளிப்கார்ட்டின் 70% வாடிக்கையாளர்கள் அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் இருந்து வருகிறார்கள். ஷாப்ஸி மூலம், ஃப்ளிப்கார்ட் இதை 90% ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளது. சமூக வர்த்தக அம்சங்களுடன் கேமிஃபிகேஷன் இந்த இலக்கை அடைய உதவும் என்று ஃபிளிப்கார்ட் நம்புகிறது. அத்தகைய ஒரு அம்சம் ஷாப் & எர்ன் ஆகும், அங்கு பயனர்கள் ஒரு குறிப்பிட்ட வாராந்திர/மாதாந்திர இலக்கை அடைந்து அதிக ஊக்கத்தொகையை அடையலாம். இந்த வகையான கேமிஃபிகேஷன் மின்-வர்த்தக வாடிக்கையாளர்கள் வளரவும் மற்றும் மேலும் அதிகப்பலன்களைப் பெறவும் வழிவகுக்கும்.

கடந்த பத்து ஆண்டுகளில், ஃபிளிப்கார்ட் தனது வாடிக்கையாளர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்கான மதிப்பை வழங்கிட பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. இது அடுத்த தலைமுறை சமூக வர்த்தக தளத்தின் வெற்றிக்கான வலுவான மற்றும் முக்கியமான தளத்தை உருவாக்குகிறது. ஜீரோ-கமிஷன் செயல்திட்டத்தைப் பூர்த்தி செய்ய விற்பனையாளர்கள் ஏற்கனவே ஃப்ளிப்கார்டின் விளம்பர தொழில்நுட்ப தளத்தை மேம்படுத்துகின்றனர். கூடுதலாக, ஃப்ளிப்கார்ட்டின் குறைந்த விலை லாஜிஸ்டிக் நெட்வொர்க் மற்றும் 'ஃபிளிப்கார்ட் பே லேட்டர்' போன்ற மலிவு திட்டங்கள் சமூக வணிகத்தின் சூழலில் புரட்சியை உண்டாக்கும் வினையூக்கியாகத் திகழும்.

***ஃப்ளிப்கார்ட்டின் வளர்ச்சி மற்றும் ரொக்கமாக்கல் பிரிவின் மூத்த துணைத் தலைவர் பிரகாஷ் சிக்காரியா*** *அவர்கள், "இந்தியா முழுவதும் உள்ள அனைவருக்கும் டிஜிட்டல் வர்த்தகத்தை செயல்படுத்துவதே ஷாப்ஸி உடனான எங்கள் நோக்கமாகும். நாங்கள் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளோம், மேலும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக தளத்தில் பல முயற்சிகளை செயல்படுத்தவும் முயல்கிறோம். ஷாப்ஸி ஒவ்வொரு வாரமும் 100% வளர்ந்து வருகிறது. இந்த தளம் ஒரு பொதுவான சமூக பயன்பாட்டின் நடத்தையை நிரூபிக்கிறது மற்றும் வைரலாகப் பரவத் தொடங்கியுள்ளது. இதை மேலும் துரிதப்படுத்த, நாங்கள் எங்கள் பயணத்தில் மேம்படுகையில், சிறந்த சமூக வணிகத்திற்கு சிறந்த மின்-வர்த்தகத் தளத்தைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். ஃபிளிப்கார்ட் குழு தொடர்ந்து மின்-வர்த்தகத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துவதில் உறுதியாக உள்ளது; ஷாப்ஸி அந்த திசையில் ஒரு முக்கியமான படியாகும்.*

*அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு மாதத்திற்குள், ஷாப்ஸி ஏற்கனவே 2 லட்சத்துக்கும் அதிகமான பயனர்களைப் பெற்றுள்ளது. பண்டிகைக் காலம் தொடங்கியவுடன், அடுத்த இரண்டு மாதங்களில் அதன் சமூக வணிகப் பயணத்தைத் தொடங்க ஆர்வமுள்ள இந்தியர்களுக்கான அம்சங்களையும் சலுகைகளையும் அதிகரிப்பதன் மூலம் அதன் வளர்ச்சியை துரிதப்படுத்துவதை இந்த தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.*

*Shopsy தொழில்முனைவில் ஈடுபட்டுள்ள இந்தியர்களுக்கு சமூக வர்த்தக வாய்ப்புகளை வழங்குகிறது. ஷாப்ஸி பயனர்கள் தங்கள் உள்ளூர் நெட்வொர்க்கைப் பயன்படுத்தி, ஃப்ளிப்கார்ட் விற்பனையாளர்களால் வழங்கப்படும் 15 கோடி தயாரிப்புகளின் பட்டியலை சமூக ஊடகங்கள் மற்றும் தகவல்தொடர்பு பயன்பாடுகளில் பகிர்ந்து கொள்ள முடியும். எளிமைப்படுத்தப்பட்ட சமூக ஊடக இடைமுகத்தில் அதன் பட்டியல் மற்றும் முழு ஸ்டாக் மின்-வர்த்தகச் சேவைகளுக்கான அணுகலை வழங்குகிறது, ஃபிளிப்கார்ட் வணிகத்தை ஜனநாயகமயமாக்க முடியும் மற்றும் வளர்ந்து வரும் சமூக வர்த்தக அமைப்பில் ஒரு புரட்சியை உண்டாக்க முடியும் என்று நம்புகிறது.*

***ஷாப்ஸியைப் பதிவிறக்கம் செய்ய:***
[https://play.google.com/store/apps/details?id=com.flipkart.shopsy](https://play.google.com/store/apps/details?id=com.flipkart.shopsy)

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து**
இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஃபிளிப்கார்ட் ஹோல்சேல் மற்றும் கிளியர்டிரிப் மற்றும் இந்தியாவின் முன்னணி பேமெண்ட்ஸ் ஆப்ஸ்களில் ஒன்றான ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களின் முதன்மை பங்குதாரராகவுள்ளது.

*2007 – ம் ஆண்டு துவக்கப்பட்ட ஃபிளிப்கார்ட், பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 350 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்த வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட் சேவையாற்றுகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.*

***மேலதிக தகவல்களுக்கு [media@flipkart.com](mailto:media@flipkart.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்***